உ.

கடவுள் துணை.

காஞ்சிபுரம்

காமாட்சியம்மன்

ஆசிரியவிருத்தம்.

(*)

இஃது

சிதம்பரம்

கருணானந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டுச்

சிந்தாத்திரிப்பேட்டை

நாராயணசாமி முதலியாரால்

தமது.

பிரபாகர- அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௲௮௮௧-௵ - டிசம்பர்௴

உ

கடவுள் துணை.

காஞ்சீபுரம்.

காமாட்சியம்மன்

ஆசிரியவிருத்தம்

காப்பு- பின்முடுகு - வெண்பா.

மங்களஞ்சேர்கச்சிநகர் மன்னுகாமாட்சிமிசைத்
துங்கமுளநற்பதிகஞ் சொல்லவே-திங்கட்
பயமறுகும்பணியணியும் பரமனுளக்தனின்மகிழுங்
சயமுறுவைங்கரனிருதாள் காப்பு.

ஆசிரியவிருத்தம்.

சுந்தரிசவுந்தரிநிரந்தரிதுரந்தரி சோதியாய்நின்றவுமையே, சுக்கிரவாரத்திலுனை கண்டுதெரிசித்தவர்கள் துன்பத்தைநீக்கிவிடுவாய், சிந்தைதனிலுன்பதத்தன்னையேதொழுதவர்க டுபரத்தைமாற்றிவிடுவாய், ஜெகமெலாமுன்மாய்கை புகழவென்றலாமோ சிறியனால்முடிந்திடாது, சொந்தவுன்மைந்தனாய் எந்தனைரட்சிக்கும் சிறியகடனுன்னுதம்மா, சிவசிவமகேஸ்பரீபரமனிடஈஸ்வரி சிரோன்மணி மனோன்மணி

யுநீஅந்தரி துரந்தரி நிரந்தரிபரம்பரியனுதாரக்ஷியும் நீயே. அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடும் அம்மைகாமக்ஷியுமையே. (௧)

பத்துவிரல்மோதிரம் எத்தனைப்பிர காசமதுபாடகந்தண்டைகொலுசும், பச்சைவயிடூரியம்இச்சையாயிழைத்திட்ட பாதச்சிலம்பினொளியும், முத்து மூக்குத்தியும் ரத்தினப்பதக்கமும்மோகன மாலையழகும் முழுதும்வயிடூரியம் புட்பராகத்தினால் முடிந்திட்ட தாலியழகும், சுத்தமாயிருக்கின்ற காதினிற் கம்மலுஞ்செங்கையிற்பொன்கங்கணம். ஜெகமெலாம் விலைபெற்றமுகமெலாமொளிவுற்ற சிறுகாதுகொப்பினழகும், அத்திவரதன்தங்கை சத்திசொரூபத்தையடியனாற்சொல்லதரமோ, அழகானகாஞ்சியில்புகழாகவாழ்ந்திடும் அம்மைகாமாட்சியுமையே. (௨)

கெதியாகவுந்தனைக் கொண்டாடிநின்றுயென் குறைகளைச்சொல்லிநின்றும், கொடுமையாயென்மீதில்வறுமையைவைத்துநீகோபமாயிருப்பதேனோ, சதிகாரியென்று நானறியாமலுந்தனைச்சதமாகநம்பினேனே, சற்றாகிலும்மனதுவைத்துயெனை ரட்சிக்கசாதகமுனக்கில்லையே, மதிபோலவொளியுற்றபுழைநெடுங்கரமுடையமதகஜனையீன்றதாயே, மாயனிடதங்கையே பரமனதுமங்கையேமயானத்தில்நின்றவுமையே, அதிகாரியென்றுநான்ஆசையாய்நம்பினேன்அன்புவைத்தென்னையாள்வாய், அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடும் அம்மைகாமாட்சியுமையே. (௩)

பூமியிற்பிள்ளையாய்ப்பிறந்தும் வளர்ந்துநான் பேரானஸ்தலமுமறியேன், பெரியோர்கள்தெரிசினமொருநாளும்நான் கண்டுபோற்றிகொண்டாடியறியேன், வாமியென்றுன்னைசிவ காமியென்றேசொல்லிவாயினாற்பாடியறியேன். மாதாபிதாவினிட பாதத்தைநானுமே வணங்கியொருநாளுமறியேன், சாமியென்றேஎண்ணிசதிருடன்கைகூப்பி சரணங்கள்பண்ணியறியேன், சற்குருவின்பாதார விந்தங்களைக்கண்டு சாஷ்டாங்கதெண்டனறியேன், ஆமித்தபூமியி லடியனைப்போல்மூடன் ஆட்சிநீகண்டதுண்டோ, அழகானகாஞ்சியில் புசழாகவாழ்ந்திடும் அம்மைகாமாட்சியுமையே. (௪)

பெற்றதாயென்றுன்னைமெத்தவும்நம்பிநான் பிரியமாயிருந்தெனம்மா, பித்தலாட்டக்காரியென்றுநானறியாமல் உன்புருஷனைமறந்தெனம்மா, பக்தனாயிருந்துமே உன்சித்தமுமிதங்காமல் பராமுகம்பார்த்திருந்தால், பாலனுனெப்படிவிசனமில்லாமலே பாங்குடனிருப்பதம்மா, இத்தனைமோசங்களாகாது ஆகாது இதுதருமமல்லவம்மா, எந்தனைரட்சிக்க சிந்தனைகளில்லையே இதுநீதியல்லவம்மா, அத்திமுகனுசையோயிப்புத்திரனைமறந்தது அதைஎனக்கருள்புரிகுவாய், அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடும் அம்மைகாமாட்சியுமையே (௫)

மாயவன்தங்கைநீமரகதவல்லிநீ மணிமந்திரகாரிநீயே, மாயாசுரூபிநீமயேஸ்பரியுமான நீமலையனாய

ன்மகளானநீ, காமேம்ஞட்சிநீசற்குணவல்லிநீதயா
நிதிவிசாலாட்சிநீ, தரணியில்பெயர்பெற்றபெரியநா
யகியுந்நீசரவணனையீன்றவளும்நீ, பேய்களுடனடு
நீஅத்தனிடபாகமதை பேர்பெறவளர்த்தவளும்நீ,
பிரணவசுரூபிநீபிரசன்னவல்லிநீ பிரியவுண்ணமுலை
யும்நீ, ஆயிமகமாயிநீஆனந்தவல்லிநீ அகிலாண்டவ
ல்லிநீயே, அழகானகாஞ்சியில்புகழாகவாழ்ந்திடும்
அம்மைகாமாட்சியுமையே. (௬)

பொல்லாதபிள்ளையாயிருந்தாலும் பெற்றதாய்
புத்திகளை சொல்ல வில்லையோ,பேய்ப்பிள்ளையானலு
ம்நீபெற்றபிள்ளையாய்பிரியமாய்வளர்க்கவில்லையோ க
ல்லாகிலும்மூச்சுநில்லாமல்வாய்விடும் கதறினழு
தகுரலில், கடுகதனிலெட்டிலொரு கூறுவதிலாகிவி
ங்காதினில் நுழைந்ததில்லையோ, இல்லாதவன்மங்க
ளென்மீதிலேனம்மா இளிவிடுவதில்லைசும்மா, இருவ
ரும்மடிபிடித் தெருவுதனில்விழுவதுஇதுதருமமல்
லவம்மா, அல்லாருமுன்னையேசொல்லியேயேசுவா
ர்அதுநீதியல்லவம்மா, அழகானகாஞ்சியில் புகழாக
வாழ்ந்திடும்அம்மைகாமாட்சியுமையே. (௭)

முன்னையோர் ஜென்மாந்திர மென்னபாவங்களை
மூடனான்செய்தேனம்மா, மெய்யென்றுபொய்சொ
ல்லி கைதனில்பொருள்தட்டி மோசங்கள்பண்ணி
னேனோ, என்னமோதெரியாது இக்ஷணந்தன்னிலே
சிக்கட்டுவந்ததம்மா, ஏழைநான்செய்தபிழைதாய்
பொறுத்தருள்தந்துஎன்கவலைதீருமம்மா, சின்னங்க

ளாகுது ஜெயமில்லையோதாயே சிறுநாணமாகுதம்
மா, சிந்தனைகளென்மீதில் வைத்துநற்பாக்கியமருள்
சிவசத்திகாமாட்சிநீ, அன்னவாகனமேறிஆனந்தமா
கவே யுன்அடியன்முன் வந்துநிற்பாய், அழகானகா
ஞ்சியில் புகழாகவாழ்ந்திடும் அம்மைகாமாட்சி யு
மையே. (௮)

எந்தனைப்போலவேஜெனனமெடுத்தோர்கள் இ
ன்பமாய்வாழ்ந்திருக்க, யான்செய்தபாவமோ யித்
தனைவறுமையி லுன்னடியேன்தவிப்பதம்மா, உன்
னையேதுணையென்றுவுறுதியாய்நம்பினேன் உன்பா
தம்சாட்சியாக, உனையன்றிவேறுதுணையினியாரையு
ங்காணேன் உலகதனிலெந்தனுக்கு, பின்னையென்
றெண்ணிநீ சொல்லாமலென்வறுமை போக்கடித்
தென்னைரட்சி. பூலோகமெச்சவேபாலன்மார்க்கண
ன்போல்பிரியமாய்காத்திடம்மா, அன்னையேயின்
முன்னடியேனைரட்சிக்க அட்டிசெய்யாதேயம்மா,
அழகானகஞ்சியில் புகழாகவாழ்ந்திடும் அம்மைகா
மாட்சியுமையே. (௯)

பாரதனிலுள்ளவும் பாக்கியத்தோடென்னை பாங்
குடனிரட்சிக்கவும், பத்தியாயுன்பாதம் நித்தந்தெரி
சித்தவர்பாலருக்கருள்புரியவும், சீர்பெற்றதேகத்தி
ல்சிறுபிணிகள்வாராமல் செங்கலியையணுகாமலும்,
சேயனிடபாக்கியஞ் செல்வங்களைத்தந்துஜெயம்பெ
ற்றுவாழ்ந்துவரவும், பேர்பெற்றகாலனைப் பின்தொ
டரவொட்டாமல் பிரியமாய்காத்திடம்மா, பிரியமா

புன்மீதில் சிறியனான்சொன்னகவிபிழைகளைப் பொறுத்துரட்சி, ஆறதனில்மணல்குவித்தரியபூசைச்செய்தஎன்னம்மை ஏகாம்பரி, அழகானகாஞ்சியில்புகழாகவாழ்ந்திடும்அம்மைகாமாட்சியுமையே, (௰)

எத்தனைசெனனமதெடுத்ததேனோதெரியாது இப்பூமிதன்னிலம்மா, இனியாகிலுங்கிருபை வைத்துயெனைரட்சியும் இனிஜெனனமெடுத்திடாமல், முத்திதரவேணுமென்றுன்னையேதொழுதுநான் முக்காலுநம்பினேனே, முன்பின்னுந்தோணாத மனிதனைப்போலநீவிழித்திருக்காதேயம்மா, வெற்றிபெறஉன்மீதில்பத்தியாய்நான்சொன்னவிருத்தங்கள் பதினொன்றையும், விருப்பமாய்கேட்டுநீ யளித்திடும்செல்வத்தைவிமலனாசேப்போரூர், அத்தனிடபாகமதைவிட்டுவந்தேயென்னருங்குறையைதீருமம்மா, அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடும் அம்மைகாமாட்சியுமையே, (௰க)

—(*)—

காமாட்சியம்மன் ஆசிரியவிருத்தம்.

முற்றிற்று.